## சொத்துக் குவிப்பு வழக்குகள்:

# தமிழக அமைச்சர்களின் மேல்முறையீடு மீது விசாரணை ஒத்திவைப்பு!

புதுடெல்லி, ஜூலை. 19– தமிழக அமைச்சர்கள் தங்கம்தென்னரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் ஆகியோருக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கை மீண்டும் விசாரிக்க பிறப்பித்த சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிரான அமைச்சர்களின் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணையை ஆகஸ்ட் 11–ஆம் தேதிக்கு பட்டியலிட உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இந்த விவகாரத்தில் தமிழக அரசு பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்யவும் அனுமதி அளித்தது.

தங்களுக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கை மீண்டும் விசாரிக்க உத்தரவிட்ட சென்னை உயர்நீதிமன்ற தனி நீதிபதியின் உத்தரவுக்கு எதிராக தமிழக அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் ஆகியோர் கடந்த ஆண்டு மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்தனர்.

அவற்றைகடந்தஆண்டு செப்டம்பர் 6–ஆம் தேதி விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் ரிஷிகேஷ் ராய், பி.கே.மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்த மனுக்கள் மீது தமிழ்நாடு அரசு நான்கு வார காலத்திற்குள் பதில் அளிக்க வேண்டும்.

இந்த நிலையில், இந்த மனுக்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள் அஸானுதீன் அமானுல்லா, எஸ்.வி.என். பட்டி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் ராம் சங்கருடன் மூத்த வழக்குரைஞர்கள் முகுல் ரோத்தகி, கபில் சிபல் ஆகியோர் ஆஜராகி சபரிஸ் சுப்ரமணியன், மனுதாரர்கள் தாக்கல் செய்த பிரமாணப்பத்திரத்துக்கு அரசு தரப்பு பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்ய 2 வாரம் அவகாசம் வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அதற்கு அனுமதி வழங்கிய நீதிபதிகள், அடுத்த விசாரணையை ஆகஸ்ட் 11–ஆம் தேதிக்குப் பட்டியலிட உத்தரவிட்டனர். அதுவரை இந்த விவகாரத்தில் ஏற்கெனவே பிறப்பித்த இடைக்கால உத்தரவு தொடரும் என்றும் நீதிபதிகள் கூறினர்.

தமிழகத்தில் 2066–2011 வரையிலான தி.மு.க. ஆட்சியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சராக இருந்த தங்கம் தென்னரசு மற்றும் அவரது மனைவி மீது ரூ.76.40 லட்சமும், பிற்படுத்த ப்பட்டோர் நலத்துறை அமைச்சராக இருந்த கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் அவரது மனைவி உள்ளிட்ட மூவர் மீது ரூ.44.56 லட்சமும் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக 2012–இல் அ.தி.மு.க. ஆட்சியில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கில் தங்கம் தென்னரசு உள்ளிட்டோரை 2022 டிசம்பரிலும், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் உள்ளிட்டோரை 2023 ஜூலையிலும் ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றம் விடுவித்தது.

இதை எதிர்த்து ஊழல் தடுப்புத்துறை மேல்முறையீடு செய்த நிலையில், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் இந்த விவகாரத்தை தாமாக முன்வந்து விசாரணைக்கு ஏற்று, மீண்டும் வழக்குகளை விசாரிக்க விசாரணை



கிருஷ்ணகிரிமாவட்டம் ஓசூர்சட்டமன்றதொகுதிக்குட்பட்டபேரிகை,கே.என். தொட்டி ஆகிய ஊராட்சிகளில் பல்வேறு வளர்ச்சி பணிகளை ஓய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் தி.மு.க. சூளகிரி வடக்கு ஒன்றிய செயலாளர் நாகேஷ், ஒசூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் லோகேஷ் ரெட்டி உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

## 'ஓரணியில் தமிழ்நாடு':

# ஆதார் விவரங்களை கேட்டு மக்களை தி.மு.க.வினர் மிரட்டுவதாக வழக்கு!

மதுரை,ஜூலை.19– மதுரையில் கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற திமுக பொதுக்குழுவில், 'ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுப்பை முதல்அமைச்சரும், திமுகதலைவருமான மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இதன்படி கடந்த ஜூலை3ம்தேதிசென்னை, ஆழ்வார்பேட்டையில் மக்களை நேரடியாக சந்தித்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் திமுக நிர்வாகிகள், வீடு வீடாகச் சென்று, மக்களைச் சந்தித்து கட்சியில் உறுப்பினர்களாகச் சேர்த்து வருகின்றனர்.

இந்நிலையில்திமுகசார்பில் நடத்தப்பட்டு வரும் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கையின்போது, பொதுமக்களிடம் ஆதார் விவரங்களை சேகரிக்க தடை விதிக்கக் கோரி ஐகோர்ட்டு மதுரை கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தை சேர்ந்த ராஜ்குமார், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:–

தமிழகத்தில் ஆளுங்கட்சியான தி.மு.க., 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற பெயரில் உறுப்பினர் சேர்க்கை இயக்கம் நடத்தி வருகிறது. இதற்காக தி.மு.க.வினர் வீடு வீடாக செல்கின்றனர். அப்போது அவர்கள் பொதுமக்களிடம் பல்வேறு ஆவணங்களை கேட்டு தொல்லை செய்கின்றனர். அனுமதி இல்லாமல் தமிழக முதல் அமைச்சர் படத்துடன் கூடிய 'ஓரணியில் தமிழ்நாடு' என அச்சிடப்பட்ட சுவரொட்டியை வீட்டில் ஒட்டுகின்றனர்.

பின்னர் குடும்ப உறுப்பினர்கள் அனைவரின் ஆதார் எண், வாக்காளர் அடையாள அட்டை, வங்கி கணக்கு புத்தக நகல் உள்பட அடையாள அட்டைகளை கேட்டனர். அதனை தர மறுத்தபோது, வீட்டுப்பெண்கள் மாதந்தோறும் அரசிடம் பெற்று வரும் ஆயிரம் ரூபாய் உதவித்தொகையை நிறுத்திவிடுவோம் என மிரட்டினர். அதோடு அனைவரின் தனிப்பட்ட செல்போன் எண்களை கேட்டு வாங்கி, தி.மு.க.வில் சேர்த்து வருகின்றனர்.

தி.மு.க.வில் சேரவில்லை என்றால் அரசின் பல்வேறு திட்டங்கள் நிறுத்தப்படும் எனவும் அச்சுறுத்துகின்றனர். அரசியல் பிரசாரத்துக்காக ஆதார் போன்ற தனிப்பட்ட தகவல்களை பயன்படுத்துவது தவறானது. இது, அரசியலமைப்பு வழங்கும் சுதந்திரம் மற்றும் தனி உரிமையை மீறுவதாகும்.

பொதுமக்களிடம் தி.மு.க.வினர் சட்டவிரோதமாக ஆதார் விவரங்களை சேகரித்தது தொடர்பாக மத்திய அரசு மற்றும் ஆதார் தலைமை செயல் அதிகாரி விசாரணை நடத்தி, தி.மு.க. பொதுச் செயலாளர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியுள்ளார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வருகிறது.

## சத்தீஸ்கரில் தாக்குதல்:

# மாவோயிஸ்டுகள் 6 பேர் சுட்டுக்கொலை!

## ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல்!!

புது டெல்லி, ஜூலை.19– சத்தீஸ்கரில் உள்ள நாராயண்பூர் மாவட்டத்தில் பாதுகாப்புப் படை வீரர்களுக்கும், மாவோயிஸ்டுகளுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 6 மாவோயிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களிடம் இருந்து துப்பாகிகள், வெடிபொருட்கள் உள்ளிட்ட ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31–ஆம் தேதிக்குள் இந்தியா மாவோயிஸ்ட்டுகள் இல்லாத நாடாக மாறும் என்று மத்திய உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். அதன் ஒரு பகுதியாக மாவோயிஸ்டுகள் நடமாட்டம் அதிகம் உள்ள சத்தீஸ்கர் வனப்பகுதியில் தீவிர தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு வருகிறது.

சத்தீஸ்கரில் மாவோயிஸ்ட்டுகளால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டமாக நாராயண்பூர் மாவட்டம் உள்ளது. சத்தீஸ்கர் தலைநகர் ராய்ப்பூரில் இருந்து தென்பகுதியில் 400 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மாநிலகாவல்துறையின்சிறப்புப் பணிப் படை மற்றும் மாவட்ட ரிசர்வ் காவல்படை, சி.ஆர்.பி.எப்.யின் சிறப்புப் பிரிவான கோப்ரா ஆகியவற்றை உள்ளடக்கிய சிறப்பு படையினர் அப்பகுதியில் தொடர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நேற்றைய தினம், நாராயண்பூர் மாவட்டத்தில் உள்ள அபுஜ்மாத் பகுதியில் மாவோயிஸ்ட்டுகள் நடமாட்டம் இருப்பதாக ரகசிய தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து, பாதுகாப்புப்படை வீரர்களுடன் இணைந்து போலீசார் கூட்டு தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது வனப்பகுதியில் பதுங்கியிருந்த மாவோயிஸ்டுகள் பாதுகாப்புப்படை வீரர்களை நோக்கி தாக்குதல் நடத்தத் தொடங்கினர்.

பதிலுக்கு பாதுகாப்புப் படை வீரர்கள் நடத்திய என்கவுண்டர் தாக்குதலில் 6 மாவோயிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களிடம் இருந்து ஏ.கே.47 மற்றும் எஸ்எல்ஆர் துப்பாக்கிகள், வெடிபொருட்கள் மற்றும் அன்றாடப் பயன்பாட்டுப் பொருட்கள் உள்ளிட்ட ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. தொடர்ந்து அப்பகுதியில் மாவோயிஸ்டுகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருகிறது.

உளவுத்துறை தகவல்கள் அடிப்படையில் வனப்பகுதியில் மாவோயிஸ்டுகள் பதுங்கியுள்ள இடங்க ளில் போலீசார் தொடர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். கடந்த மாதங்களில் மாவோயிஸ்ட் முக்கிய தலைவர்களான சுதாகர், பாஸ்கர் உட்பட பல நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில் இந்திராவதி தேசிய பூங்கா பகுதியில் நடந்த தாக்குதலில் கொல்லப்பட்ட மாவோயிஸ்ட் முக்கியத் தலைவரான பாஸ்கர் தலைக்கு ரூ.45 லட்சம் விலை வைக்கப்பட்டிருந்தது. கடந்த 18 மாதங்களில் 421 மாவோயிஸ்ட்டுகள் என்கவுண்டர் மூலம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.


## பருகூர் ஊராட்சி ஒன்றியம்

ந.க.எண்.419/2025/அ4 நாள்: 16.07.2025.

### ஏல விளம்பரம்

பருகூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் உள்ள கீழ்க்கண்ட இனங்களை 01.08.2025 முதல் 31.03.2026 வரை ஏலம் எடுத்து நடத்திடும் பொருட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அவற்றிற்கு எதிரே குறிப்பிட்டுள்ள நாளன்றும் நேரத்தின்படியும் பருகூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலரால் பொதுமக்கள் முன்னிலையில் கலம் எண் (6)இல் உள்ள தினங்களில் பகிரங்க ஏலம் விடப்படும். ஏலம் கோர விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலத்தில் கலந்துகொள்ளலாம்.

| வ. எண். | ஏலம் நடத்தப்பட உள்ள கடைகளின் விபரம் | கடை எண் | டெபாசிட் தொகை ரூ. | டெபாசிட் தொகை செலுத்த வேண்டிய நாள் | ஏலம் நடத்தப்பட உள்ள இடம், நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | பருகூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் உள்ள புதிய 3 கடைகள் (கிழக்கு பகுதி). | கடை எண்.6,7 மற்றும் 8 | 25000/(ஒரு கடைக்கு) | 29.07.2025 காலை 11.00 மணி வரை. ஊராட்சி ஒன்றிய அலுவலகம், பருகூர். | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், பருகூர். நாள்: 29.07.2025 செவ்வாய்கிழமை |

### நிபந்தனைகள்

1. ஏலம் கோர விரும்புபவர்கள் மேற்காணும் ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக டெபாசிட் தொகை செலுத்திய நபர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.
2. அரசாணை (நிலை) எண்.82, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.2) துறை,

னா.

தமிழக அரசின் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் ...

... நீதிமன்றத்துக்கு 2024, அக்டோபர் 29–ஆம் தேதி உத்தரவிட்டார்.


## தனேஜா ஏரோஸ்பேஸ் அண்ட் ஏவியேஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம் : பேலகொண்டபள்ளி கிராமம், தளி ரோடு, தேன்கனிக்கோட்டை,
பேலகொண்டபள்ளி - 635 114, (தமிழ்நாடு)
போன் : +91 04347 233509, பேக்ஸ் : + 91 04347 233414 E-mail : secretarial@taal.co.in,
Website : www.taal.co.in, CIN : L62200TZ1988PLC014460

### அறிவிப்பு

கம்பெனிகள் சட்டம், 2013 ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழ் கட்டமைக்கப்பட்ட விதிகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) மற்றும் முறையே 5 மே, 2020, 8 ஏப்ரல், 2020, 13 ஏப்ரல், 2020, 13 ஜனவரி, 2021, 05 மே, 2022, 28 டிசம்பர், 2022, 09 செப்டம்பர், 2023 மற்றும் 19 செப்டம்பர் 2024 (பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள்) தேதியிட்ட எம்சிஏ பொது சுற்றறிக்கை எண். 20/2020, 14/2020, 17/2020, 2/2021, 2/2022, 10/2022, 09/2023 மற்றும் 09/2024 மற்றும் சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 தேதி 12 மே 2020, SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 தேதி 15 ஜனவரி 2021, SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62 தேதி 13 மே 2022, SEBI/HO/CFD/PoD-2/CIR/2023/4 தேதி 5 ஜனவரி 2023, SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2023/167 தேதி 7 அக்டோபர் 2023 மற்றும் SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2024/133 தேதி 3 அக்டோபர் 2024 ஆகியவற்றுக்கு இணங்க, ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்களின் நேரடி பங்கேற்பு இல்லாமல், **தனேஜா ஏரோஸ்பேஸ் அண்ட் ஏவியேஷன் லிமிடெட்டின் (நிறுவனம்) 36வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) ஆகஸ்ட் 12, 2025 செவ்வாய்க்கிழமை மதியம் 12:00 மணிக்கு காணொளி காட்சி (VC) / பிற ஆடியோ காட்சி முறை (OAVM) மூலம் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.**

பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் கீழ், அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனி/வைப்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப்பட்டு வருகிறது. உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் VC/OAVM மூலம் பங்கேற்கலாம்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்கள் மீது உறுப்பினர்கள் அவர்களின் வாக்குகளை அளிக்க தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதியை கம்பெனி வழங்குகிறது. மேலும், வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு (e-voting) வசதியையும் கம்பெனி வழங்குகிறது. மின்னணு வழிமுறையில் வாக்களிப்பதன் மூலம் அலுவல் பரிவர்த்தனை மேற்கொள்ளப்படும். தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் மின்னணு வாக்களிப்பு தொடர்பான விரிவான வழிகாட்டுதல்கள் உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வரும் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

சட்டப்பிரிவு 103-ன் கீழ், VC/OAVM வசதி மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள் குறைந்தபட்ச எண்ணிக்கைக்காக கணக்கிடப்படுவார்கள்.

அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளம் www.taal.co.in மற்றும் பிஎஸ்இ இணையதளம் www.bseindia.com மற்றும் NSDL இணையதளம் evotingindia.nsdl.com–ல் கிடைக்கும்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவற்றை பெறுவதற்காக காகித வடிவில், அத்துடன் மின்னணு வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் மற்றும் கம்பெனி/வைப்பாளர்களிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்கள், கம்பெனி பதிவாளரும், பங்கு மாற்று முகவருமான பிக் ஷேர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின் investor@bigshareonline.com அல்லது கம்பெனியின் secretarial@taal.co.in–ல் அவர்களின் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வருடாந்திர பொதுக் கூட்டத்தில் VC/OAVM மூலம் பங்கேற்பது மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் மின்னணு வாக்களிப்பு குறித்த வழிகாட்டுதல்கள் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு ஆகஸ்ட் 07, 2025 (காலை 9.00 மணி) அன்று துவங்கி ஆகஸ்ட் 11, 2025 (மாலை 5.00 மணி) அன்று முடிவடைகிறது. ஆகஸ்ட் 11, 2025 அன்று மாலை 5.00 மணிக்கு பின்னர் தொலைதூர மின்னணு வாக்களிப்பு அனுமதிக்கப்படமாட்டாது.

கட்-ஆப் தேதியில் அதாவது ஆகஸ்ட் 05, 2025 அன்று உறுப்பினர்கள் பதிவேட்டில் அல்லது வைப்பாளர்களால் பராமரிக்கப்படும் நன்மைபயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர் இடம்பெற்றுள்ள நபர் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு வசதியை பெறத் தகுதியுடையவர் ஆவார்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பை அனுப்பிய பின்னர் கம்பெனியின் உறுப்பினர்களாகும் நபர்கள், உள்நுழைவு முகவரி (login ID) மற்றும் கடவுச்சொல்லை (password) பெறுவதற்கு investor@bigshareonline.com அல்லது secretarial@taal.co.in க்கு எழுதலாம்.

ஒரு உறுப்பினர் தொலைதூர மின்னணு வாக்களிப்பின் மூலம் தனது வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்திய பிறகும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கலாம், ஆனால் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார். வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு வசதி கிடைக்கும்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அது குறித்து, www.evoting.nsdl.com -ல் உதவிப் பிரிவில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவு ("FAQs") மற்றும் மின்னணு வாக்களிப்பு பயனர் கையேட்டை பார்க்கவும் அல்லது evoting@nsdl.co.in க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

**தனேஜா ஏரோஸ்பேஸ் அண்டு ஏவியேஷன் லிமிடெட்**

தேதி : 19.07.2025 — **அஸ்வினி நவரே**
இடம் : பூனே — **நிறுவன செயலாளர்**


# மின்சார ரெயிலின் மேல் குதித்த ஆந்திர மாநில இளைஞர்!

## தீப்பிடித்து உயிருக்கு போராடிய நிலையில் மீட்பு !!

தாம்பரம், ஜூலை.19–

செங்கல்பட்டில்இருந்து தாம்பரம் வழியாக சென்னை கடற்கரை செல்லும் மின்சார ரெயில், இன்று இரவு 8 மணியளவில் தாம்பரம் ரெயில் நிலையம் மூன்றாவது பிளாட்பாரத்தில் வந்து நின்றது.

அந்த நேரத்தில் வட மாநில இளைஞர் ஒருவர் தாம்பரம் ரெயில் நிலையத்தின் நடை மேம்பாலத்தில் நின்றவர் திடீரென, நடை மேம்பாலத்தில் இருந்து,3–வது பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த மின்சார ரெயில் மேல் பகுதியில் குதித்தார். அடுத்த வினாடியே உயர் அழுத்த மின்சாரம் அந்த இளைஞர் மீது பாய்ந்து, தீப்பிடித்தது.

தீயில் கருகிய இளைஞர், மின்சார ரெயிலின் மேல் பகுதியில் எரிந்த நிலையில் துடித்தார்.

இதையடுத்து தாம்பரம் ரெயில் நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. உடனடியாக ரெயில்வே பாதுகாப்பு படையினர் ரெயில்வே போலீசார்,ரெயில்நிலைய அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். அதோடு ரெயில்வே கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுத்து, தாம்பரம் ரெயில் நிலைய மூன்றாவது பிளாட்பாரத்தில் மின் இணைப்புகள் முழுமையாக துண்டிக்கப்பட்டன. அதோடு ரெயில்வே பாதுகாப்பு படையினர் ரெயில்வே ஊழியர்கள் மின்சார ரெயில் மேல்பகுதியில் எரிந்து கொண்டிருந்த இளைஞரை கீழே இறக்கி அவசரமாக 108 ஆம்புலன்ஸ் மூலம் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அதோடு தாம்பரம் மூன்றாவது பிளாட்பாரத்திற்கு மீண்டும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. அடுத்து செங்கல்பட்டு தாம்பரம் சென்னை கடற்கரை மின்சார ரெயில், மேற்கொண்டு செல்லாது என்ற அறிவிப்பு கொடுக்கப்பட்டது. மின்சார ரெயிலில் இருந்த பயணிகள் இரண்டாவது பிளாட்பாரத்தில் நின்ற மற்றொரு மின்சார ரயிலுக்கு மாற்றி அனுப்பப்பட்டனர். இந்த நிலையில் இது சம்பந்தமாக தாம்பரம் ரெயில்வே பாதுகாப்பு படையினர் தாம்பரம் ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவத்தில் ஈடுபட்ட இளைஞர் யார்என்றுதெரியவில்லை. ஆனால் அந்த இளைஞருக்கு சுமார் 35 வயது இருக்கும் என்றும், வட மாநிலஇளைஞரைபோல் இருப்பதாகவும் கூறப்படுகிறது. அதோடு போலீசார் வழக்கம்போல் மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞராக இருக்கலாம் என்றும் கூறுகின்றனர்.

இந்த நிலையில் ரெயில்வே போலீசார் நடத்திய விசாரணையில், இந்த சம்பவத்தில் ஈடுபட்ட இளைஞர் ஆந்திர மாநிலம் திருப்பதி பீ.டி. ஆர்காலனிசேர்ந்தவெங்கடேசன் என்பவரின் மகன் சேகர் (வயது 37)என்பதும், இவர் ரம்மி சூதாட்டத்தில் விளையாடி ரூபாய் 2 லட்சம் இழந்ததால் மனைவி பிரிந்து சென்றுவிட்டார். அந்தக் கவலையில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்றும் தெரியவந்தது. இவருக்கு 30 சதவீத தீக்காயம் ஏற்பட்டுள்ளதாகவும், இதை அடுத்து இவரை சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் ரெயில்வே போலீஸ் தரப்பில் தெரிவித்தனர்.



ஈரோடு மாவட்டம் புளியம்பட்டி பிளேக் மாரியம்மன் கோவிலில் ஆடி முதல் வெள்ளியை முன்னிட்டு பெண்கள் விளக்கேற்றி பூஜை செய்து வழிபட்டனர்.


நாள்:13.06.2023[illegible]

கொள்ளலாம்.

3. அரசாணை (நிலை) எண்.92 நாள்:03.07.2007ன்படி ஒவ்வொரு முறையும் புதுப்பிக்கும் போது குத்தகை தொகை 5% உயர்த்தி அதிக தொகைக்கு ஏலம் கோருபவருக்கே காய உத்தரவு வழங்கப்படும்.

4. ஏலம் எடுப்பவர்கள் மேற்படி ஏலத் தொகையுடன் சேவை வரி 18% தற்பொழுது நடைமுறையில் இருக்கும் இதர வரியினங்கள் சேர்த்து முழுத் தொகையையும் ஏலம் முடிந்தவுடனேயே ஒன்றிய கருவூலத்தில் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாவிடில் டெபாசிட் தொகை பறிமுதல் செய்வதுடன் ஏலம் இரத்து செய்யப்படும்.

5. கடைகள் மாத வாடகைக்கு அனுபவிக்க அதிக பட்சம் ஏலம் கோருபவர்கள் ஏலத் தொகையுடன் காப்பு தொகை 12% மற்றும் நடைமுறையில் உள்ள வரியினங்கள் சேர்த்து 03 மாதத்திற்கு முழு தொகையையும் ஏலம் முடிந்த உடனே ஒன்றிய கருவூலத்தில் செலுத்தப்படவேண்டும்.

6. அரசு அவ்வபோது விதிக்கப்படும் வரியினங்கள் ஏலம் எடுத்த குத்தகைதாரர்கள் செலுத்த வேண்டும்.

7. ஏலத் தொகையை பெற்றுக் கொள்ளவோ அல்லது மறுக்கவோ ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

8. ஏலம் தொடர்பாக அனைத்து முடிவுகளும் ஆணையாளர் எடுக்கும் முடிவே இறுதியாகும்.

9. ஏலம் எடுக்கப்பட்ட கடைகளை விரிவாக்கம் செய்யவோ, இடிக்கவோ அனுமதி கிடையாது. மீறினால் காய உத்தரவு இரத்து செய்வதுடன் உரிய இழப்பீடு வசூலிக்கப்படும்.

10. ஏலம் எடுக்கும் நபர்களே அனுபவிக்க வேண்டும். வேறு நபர்களுக்கோ அல்லது அதிக தொகைக்கென மூன்றாவது நபருக்கு விடுவது தெரியவந்தால் 1994ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டப்படி செலுத்திய தொகையை பறிமுதல் செய்வதுடன் அன்றே காலிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

11. கட்டடத்திற்கு வருடம் ஒருமுறை வெள்ளை அடித்தல் மற்றும் வர்ணம் பூசுவது போன்றவற்றை ஏலதாரரே மேற்கொள்ள வேண்டும்.

12. கடைக்குண்டான மின்கட்டணத்தை கடை ஏலதாரரே மின் வாரியத்திற்கு உரிய காலகெடுவிற்குள் செலுத்த வேண்டும்.

**ஆணையாளர்,**

வெ.ஆ.எண்.87/செ.ம.தொ.அ./கிருஷ்ணகிரி நாள்:18.07.2025 — **ஊராட்சி ஒன்றியம், பருகூர்.**



## ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சூளகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம்.

### ஒப்பந்தபுள்ளி கோரும் அறிவிக்கை விவரம்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஒப்பந்தபுள்ளி கோரும் அலுவலர் பெயர் பதவி மற்றும் முகவரி | : | திருமதி.ஆர்.சாந்தலட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), சூளகிரி. | | | |
| 2. | அ) திட்டத்தின் பெயர் /பணிகளின் விவரம் | : | வ. எண். | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சம்) ரூ. |
| | | | 1 | கனிமங்களும் குவாரிகளும் (வட்டார ஊராட்சி) (2023-24) | Strengthening Of Road From Hosur Union Limit To B.Thattanapalli Road Km 0/0 - 0/500 H/O B.S.Thimmasandiram (R-197) | 18.00 |
| | | | 2 | | Strengthening Of Road From Mylepalli To Chakkarlu Km 0/0 - 1/250 H/O Angondapalli (R-34) | 59.10 |
| | | | | | மொத்தம் | 77.10 |
| | ஆ) பணிகள் நடைபெறும் மாவட்டத்தின் பெயர் | : | கிருஷ்ணகிரி மாவட்டம் | | | |
| 3. | எந்த இடத்தில், எந்த தேதியில், என்ன விலைக்கு ஒப்பந்தபுள்ளி சம்பந்தமாக படிவம் கிடைக்கும் என்ற விவரம் | : | மின்ஒப்பந்தபுள்ளி www.tntenders.gov.in-என்ற இணையதளத்தினை பார்வையிடவும் (18.07.2025 முதல் 01.08.2025 வரை) | | | |
| 4 | செலுத்த வேண்டிய முன்வைப்புத் தொகை | : | மதிப்பீட்டில் 1% தொகை முன்வைப்புத் தொகையாக இணையதளத்தின் வாயிலாக செலுத்தப்பட வேண்டும். | | | |
| 5 | நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் மற்றும் இடமும் | : | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சூளகிரி 01.08.2025 பிற்பகல் 3.00மணி வரை | | | |
| 6. | பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி திறக்கப்படும் இடமும், நாளும் | : | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சூளகிரி 01.08.2025 பிற்பகல் 4.00 மணி வரை | | | |
| 7. | ஒப்பந்தபுள்ளி அலுவலர் பொருத்தமானது என தீர்மானிக்கும் முக்கியமான தகவல் | : | தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, ஒப்பந்தப்புள்ளி விதிகள் மற்றும் பொறியியல் கையேடு ஒப்பந்த விதியின் படி ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கப்படும். | | | |

வெ.ஆ.எண்.85/செ.ம.தொ.அ/கிருஷ்ணகிரி நாள்:18.07.2025 — **வட்டார வளர்ச்சி அலுவலர், சூளகிரி**


19-07-2025 Malaimurasu